புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 9. TML1148 - பெண் ஆளுமைகளின் சமுதாயப் பங்களிப்பு

திருமதி. வி.நித்யா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு –638102

**முன்னுரை**

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பெண்ணியப் போக்குகள் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றிருக்கின்றன. பெண்ணியம் என்பது ஆண்களை எதிர்க்கும் நோக்கம் கொண்டதல்ல. பெண்ணியம் ஆணுக்கு எதிரானதோ, ஆணை ஒதுக்கியதோ அன்று. பெண்ணியம் என்பது ஆணுக்குத் துணை புரிந்து இருவரும் இணைந்து சமத்துவமாய் வாழ்வதாகும்;.

பெண்களுக்கு ஏற்படும் அனைத்துச் சிக்கல்களையும் நீக்கினால்தான் அரசியல், பண்பாடு, பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் மாற்றம் உண்டாகும் என்பதை, "பெண்ணியம் என்பது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்"1 என்ற கூற்றில் சித்து.மா.சாலமன் வெளிப்படுத்துகிறார்.

பெண் என்பவள் குழந்தையினைப் பெற்றுப் பேணி வளர்ப்பவள். ஆண்களுக்கு இலகுவான மனம் கொண்டவள். நீராகவும், நெருப்பாகவும், கல்லாகவும், கனியாகவும் விளங்கக்கூடிய எதிர்மறைத் தன்மைகளின் இருப்பிடமாகத் திகழ்பவள். இத்தகைய பல பரிமாணங்களைக் கொண்ட பெண், குடும்பம் என்ற அமைப்புக்குள் இறுக்கம் பெற்றவுடன் அவளது செயல்பாடுகள் சுருங்கிப் போய்விடுகின்றன.

சங்க காலத் தமிழ் இலக்கியங்களும் இலக்கண நூல்களும் பெண்கள் குறித்தான மதிப்பீடுகளை எடுத்துக் கூறியிருக்கின்றன. தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலாகக் கருதப்படும்

தொல்காப்பியம்,

"அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற்குரிய"2

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்"3

என்னும் நூற்பாக்களால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அறியாமை, கற்பு, ஒழுக்கம் என்பவை பெண்ணுக்குரிய குணங்கள் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

பொருள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட காலத்தில் குறுந்தொகை, கடமை செய்து வினையாற்றலை ஆண்களுக்குரிய கடமையாகவும் இல்லறத்தில் இருந்து கடமையாற்றலைப் பெண்களுக்குரிய கடமையாகவும் வரையறுத்திருக்கிறது.

சங்க காலத்தில் பெண்கள் வீரமிக்கவர்களாகவும், புலமை பெற்று அரசர்களுக்குக்கூட அறிவுரை வழங்குபவர்களாகவும், விருந்தோம்பல் என்ற தலையாயப் பண்பைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். பெண்கள் வாழுகின்ற இடம் அல்லது சூழ்நிலை கொண்டே அவள் அச்சமூகத்தில் மதிப்பிடப்படுகிறாள். ஒவ்வொரு பெண்ணும் தனக்குண்டான சூழலைத் தேர்ந்தெடுப்பதில்லை. வாழும் சமூகத்திடமிருந்து திணிக்கப்பட்டதைத் திறம்பட செயல்படுத்தவே முயல்கின்றாள்.

அரங்க மல்லிகா, "பக்தி இலக்கியக் காலத்தில் சமயங்களின் எழுச்சியால் சாதிக் கட்டளைகளை மீறிப் பெண்கள் கோவில் வழிபாடு, விருந்தோம்பல், சமூகப் பணிகளில் கலந்து கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொண்டனர். அரச, பிராமண, வேளாளர் குலப் பெண்கள் சமய வாழ்வில் அதிகம் பங்கேற்றுள்ளனர். அதற்குப் பின்னர்ச் சிற்றிலக்கியங்களில் 'பதிவிரதை' என்ற கொள்கையை வரையறுத்ததோடு பெண்ணைப் பாலியல் பொருளாகக் கருதின"4 என்று குறிப்பிடுகிறார்.

*இருபதாம் நூற்றாண்டில் விடுதலைக்கு முன்னும் பின்னும் பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. சாதி, மதம், பண்பாடு என்பனவற்றின் அடிப்படையில் பெண்கள் தங்கள் சுய அடையாளத்தை இழந்த நிலையில் காந்தியடிகள், ராஜாராம் மோகன்ராய் போன்ற அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளாலும் பெண்களிடத்தில் எழுச்சி ஏற்பட்டது.*

**பெண் ஆளுமைகள்**

*சங்க காலத் தமிழகத்தில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர். இடைப்பட்ட பக்தி இலக்கியங்களும் பெண்ணின் பெருமையைப் பேசின. சமயங்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கிய பிறகுதான் இந்நிலை மாறிப் பெண்கள்அடிமைகளாக்கப்பட்டனர்.*

*இந்தக் காலக்கட்டத்தில்தான் பெண் விடுதலை வேண்டி வேதநாயகம் பிள்ளை, பாரதியார், பெரியார், திரு.வி.க. முதலானோர் தம் எழுத்துக்களில் பெண்களுக்கு முதன்மை கொடுத்து எழுதினர். இதனடிப்படையில் பெண் உரிமை பெண் விடுதலை பற்றிய பெண்ணியக் கருத்துகள் தமிழகத்தில் வலுப்பெற்றன. பெண்களுக்குச் சம வேலை வாய்ப்பு கிடைக்கத் தொடங்கியுள்ளது. மேலும் சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளுக்குத் தங்கள் பங்கினைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றனர்.*

*“அந்தஅந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பெண்மையின் அன்றைய வாழ்வியலைப் பதிவு செய்வதாக உள்ளது. அறிவுநலம் மிக்க பெண்பாற் புலவர்களையும் மன்னர்களுக்கு இடையே போர் தவிர்க்க தூது சென்று சொல்லால் சமர் வென்ற மதிநுட்பத்தினையும், முறை தவறிய மன்னனுக்கு நீதியினை உணர்த்திய மறத்தினையும் சங்க இலக்கியத்தின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.”5 என்று ம.தனப்பிரியா பெருமைக்குரிய பெண்கள் நூலின் வாழ்த்துரையில் குறிப்பிடுகிறார்.*

*மேலும் ‘நவீன காலத்துப் பெண்களின் வாழ்க்கையானது கற்போருக்கு வழிகாட்டியாகவும், வாழ்க்கை சவால்களை எவ்வாறு மனஉரத்தோடு சமாளிப்பது குறித்தும் அனைத்துப் பெண்களும் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும்.’6 என்று தற்காலப் பெண்களின் துணிச்சலான தைரியமான போக்கினை ம.தனப்பிரியா எடுத்துரைக்கின்றார்.*

*அந்த வகையில் சிறந்த பெண் ஆளுமைகளான நீதிபதி பிரபாஸ்ரீதேவன், முனைவர் ஆ.தே.ரேவதி, புதிய மாதவி, அமுதா ஐ.ஏ.எஸ், நால்வரின் சமுதாயப் பங்களிப்பின் சிறப்பினை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*

**நீதிபதி பிரபா ஸ்ரீதேவன்**

*சமூகத்தின் வளர்ச்சியைத் தடுக்கும், மனிதனை மனிதனாக மதிக்கவிடாத ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கும் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் அவர்கள் நேர்மையுடன் சமூகத்தின் நலிந்தவர்கள், பெண்கள், கல்வி, இயற்கை வளம் சார்ந்த வழக்குகள் என்று பல்வேறு வழக்குகளில் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் தைரியமான, சரியான தீர்ப்புகளை வழங்கி, சமூகச் சமத்துவத்திற்குக் குரல் கொடுத்த சிறந்த ஆளுமைப் பெண்மணி.*

*உயர்நீதி மன்றத்தின் ஐந்தாவது பெண் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டவர். சட்டத்தின் கண்களில் நடுநிலைமையோடு பெண் என்ற சலுகைகளை எதிர்பார்க்காமல் பணியினைச் செய்தவர். பெண் என்பதால் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அறிந்துகொண்டு, வழக்குகளில் பெண்களின் மனநிலை யிலிருந்து புரிந்து கொண்டு பாரபட்சமின்றி நீதியின் தராசில் சமமாகவே வழக்குகளைக் கையாண்ட ஆளுமை உடையவர் பிரபா ஸ்ரீதேவன்.*

*‘சாலை விபத்து இழப்பீடு’ வழக்கில் தந்தைக்கு மட்டும் இழப்பீடு கொடுத்தால் போதும் தாய்க்குத் தேவை இல்லை என்று உயர்நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வழக்கில், “இல்லத்தரசிகள் நாள்தோறும் செய்யும் பணிகளுக்கான பணமதிப்பு அளவிடப்படுவதில்லை. ஒரு பெண் தான் வீட்டிலிருந்து கொண்டு, கணவன் பணியில் கவனம் செலுத்துவதற்கான சூழலைக் கொடுப்பதால்தான் கணவனால் சம்பாதிக்க முடிகிறது என்பதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். சிடா (ஊநுனுயுறு) என்ற பெண்கள் மீதான அனைத்து வகைப் பாகுபாடுகளையும் களைவதற்கான சர்வதேச ஒப்பந்தம் ஒவ்வொரு நாடும் தங்களது சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் மதப்பிடப்படாத வீட்டுப் பணிகளையும் சேர்த்தே கணக்கெடுக்க வேண்டும் என்று சொல்கிறது”7 என்று பெண்களுக்காகத் துணைநின்றதைப் ‘பெருமைக்குரிய பெண்கள்’ என்னும் நூலில் எடுத்துரைக்கிறார். கணவன் மனைவிக்கிடையில் வியாபார ஒப்பந்தம் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டியதில்லை என்றும் வாய்மொழி ஒப்பந்தமாகவே இருந்தாலும் நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளும். மேலும், பாதிக்கப்பட்ட பெண்ணிற்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டினை அதிகப்படுத்தித் தீர்ப்பளித்தார்.*

*‘நெக்சாவேர்’ என்ற புற்றுநோய் மருத்துவத்திற்கான மருந்தை மாதம் ரூ.2,80,000 என்று போயர் நிறுவனம் நிர்ணயித்த நிலையில், அந்த மருந்து தயாரிப்பதற்கான உரிமையை நாட்கோ நிறுவனத்திற்குக் கொடுத்துக் குறைந்த விலையில் பொதுமக்கள் அனைவருக்கும் புற்றுநோய் மருத்துவம் எட்டுவதற்கான*

வழங்கிய தீர்ப்பே.8 சிறந்த தீர்ப்பாகும் என்று பிரபா ஸ்ரீதேவன் குறிப்பிடுகிறார்.

மதுரை யானை மலையைக் குடைந்து கிரானைட் கல் எடுக்கக் கூடாது என்று பெண்கள் சாலையில் படுத்துப் போராட்டம் நடத்தியபோது நடந்த வழக்கில் 'யானை மலையைக் குடைந்து ஒரு கல்லைக்கூட எடுக்கக்கூடாது' என்று தடை பிறப்பித்து வழங்கிய தீர்ப்பு பிரபா ஸ்ரீதேவனுக்கு மனநிறைவைத் தந்ததாகக் குறிப்பிடுகிறார்.

**முனைவர் ஆ.தே.ரேவதி,**

முனைவர் ஆ.தே.ரேவதி தெளிந்த அறிவும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டவர். இவர் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (வுயஅடைெயனர ஊழஅஅளைளழைெ கழச நிசழவநஉவழைெ ழக ஊலீடைன சுவீபாவள) குழந்தைநலக் கொள்கையை உருவாக்கிக் கொடுத்தவர். அதில் மருத்துவம் மற்றும் சுகாதாரம், கல்வி, விளையாட்டு, பாதுகாப்பு என்று குழந்தைகளின் முழுவளர்ச்சிக்குமான பல பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. 'குழந்தை உரிமைகள் இந்தியா' எனும் தேசிய இயக்கத்தைத் தோற்றுவித்தவர். குழந்தைகள் உரிமைகளுக்காகவும் நலனுக்காகவும் உழைப்பதை உணர்விலும் உயிரிலும் விருப்பமாகக் கொண்டவர். இந்தியக் குழந்தை நலச்சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றிக் குழந்தை உரிமைகளுக்கு உழைக்கவும் போராடவும் கிடைத்த வாய்ப்பு தன்னுடைய வாழ்க்கைக்கு உயர்வுக்குக் காரணமாக அமைந்தது என்கிறார்.

குழந்தைகள் உரிமை மற்றும் நலனிற்காகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், பாலியல் தீங்கிழைப்பிற்கு எதிரான போக்சோ ஆக்ட், மிகவும் அடிப்படையான இளம்சிறார்கள் நீதிச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம் ஆகியன உள்ளன. இச்சட்டங்களின் அடிப்படையில் குழந்தை உரிமைகள் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கவேண்டும். கல்வி கிடைக்க வேண்டும். ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பவைதான் நாட்டின் முன்னேற்றத்திற்கு முதல்படியாக இருக்கவேண்டும். அதனடிப்படையில், 'தமிழ்நாடு அரசின் குழந்தை நலக் கொள்கை வரைவு இரண்டாண்டுகள் உழைத்து உருவாக்கப்பட்டது. அதில் சந்தித்த போராட்டங்கள் எண்ணற்றவை. எத்தனை இடையூறுகள் வந்தாலும் நாம் செய்யும் பணி சரியானதுதான் என்றால், நியாயமானது என்றால், சட்டபூர்வமான முறையில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களுக்குள் அடங்கிப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெற முடியும்'9 என்று வெற்றிக்கான வழிமுறைகளைப் 'பெருமைக்குரிய பெண்கள்' என்னும் நூலில் எடுத்துரைக்கிறார்.

பாலினப் பாகுபாடுகளின்றிப் பாலினச் சமன்பாட்டைக் கற்றுக் கொடுக்கவேண்டும். உடற்கூறுகளில், இயக்கங்களில் மட்டும் சில வேறுபாடுகள் இருக்குமே தவிர அனைவரும் சமம் என்பதை வலியுறுத்த வேண்டும். பெற்றோரும் சமூகமும் குழந்தைகள் கல்வி கற்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். இதனைச் செய்தாலே குழந்தை உரிமைகள் பேணப்படும். கல்விக்கூடங்களில் பாடத்திட்டத்தில் குழந்தை உரிமை பற்றிய சிந்தனைகளை அறிவுறுத்தவேண்டும். இவ்வாறு செயல்பட்டுக் 'கல்வி உரிமையின் மூலமாகத்தான் சரியான விசயங்களைக் கொண்டு சேர்க்க முடியும். கல்வி என்பது ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். குழந்தைகளுக்கான கல்வியாக இருக்கவேண்டும். குழந்தை உரிமைகளை அறிந்துகொண்ட வகையில் கற்றல் இருக்குமானால் இந்தியா வலிமைமிகு இந்தியாவாக உருவாவதற்கு முதற்படியாக இருக்கும்.'10 என்று ஆ.தே.ரேவதி இந்தியாவின் முன்னேற்றத்திற்குரிய கருத்தினை முன்வைக்கின்றார். இந்தவகையில் செயலாற்றினால் குழந்தை உரிமைகளை உள்ளடக்கிய கல்வியாகவும் பாலினச் சமத்துவத்தை இணைத்துக் கற்பிக்கும் கல்வியாகவும் சீர்படுத்தப்பட்டுக் குழந்தை உரிமைகள் சமூகத்தில் நிலைநாட்டப்படும்.

மேலும், "நேர்மையான ஆற்றல் பெண்களிடமும் குழந்தைகளிடமும் கூட்டாகவே இருக்கிறது என்பதால், பெண்கள்தான் குழந்தைகளை நேர்மறை ஆற்றல் உள்ள இளம் மனிதர்களாக வளர்த்தெடுக்கிறார்கள். குழந்தைகளையும் பெண்களையும் உலகத்தின் முழுமை, நேர்மறை ஆற்றல் என்று சொல்லலாம்"11 என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் பற்றி ஆ.தே.ரேவதி தன் கருத்தினை முன்வைக்கின்றார்.

**புதிய மாதவி**

பெண்ணியச் செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான புதியமாதவி மும்பை பெருநகரத்தின் அவலங்களை, தாராவியின் மௌன ஓலங்களை, மாறிவரும் பெண்கள் உலகத்தைப் பதிவு செய்து வருபவர். "ஆட்சி அதிகாரம் சட்டம் என்று வந்துவிட்டால் அது முழுக்கவும் பெண்ணுலகிலிருந்து ரொம்பவும் தூரமாக இருக்கிறது. ஒருவகையில் சொல்லப்போனால் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் அரசியல், முழுக்கவும் ஆண்களுக்கானதாக இருக்கிறது"12 என்று ஆணாதிக்கப் போக்கினைப் புதிய மாதவி, 'சங்கமி பெண்ணிய உரையாடல்கள்' என்னும் நூலில் எடுத்துரைக்கிறார்.

**சினிமா சித்தரிப்பு எதிர்ப்பு**

மும்பையின் சேரிப்புறத்தில் தினமும் கொலை, கொள்ளை, வன்புணர்வு, சண்டை நடப்பது போலவும்

இங்கே வாழ்பவர்கள் எல்லோரும் தாதாக்கள் போலவும் காட்டுகிறார்கள். சினிமாவில் காட்டப்படும் கதாநாயகர்கள் அனைவரையும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் நினைப்பதும் வில்லன்களைக் கேடிகளாகவும் சமூக விரோதிகளாகவும் நினைப்பதும் சினிமா மூலம் நம் மக்களின் பொதுப்புத்தியில் விமர்சனத்திற்கு இடமின்றித் திணிக்கப்பட்டிருக்கிறது. 'மும்பை சேரிப்புற வாழ்க்கை பற்றிய சினிமா சித்தரிப்புகளும் இதே சேரிப்புறத்தில் வாழ்ந்த இந்துக்களும் இசுலாமியர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பதை எவரும் குறிப்பிடுவது இல்லை'13 என்று தன் கருத்தைப் பதிவு செய்கிறார் புதியமாதவி.

ஆணின் விடுதலை எப்போதும் சமூக விடுதலையாகவும் அதே நேரத்தில் இச்சமூகத்தில் சரிபாதியாக இருக்கும் பெண்ணின் விடுதலை மட்டும் தனித்து பெண் விடுதலையாகவும் இன்று வரை தொடர்கிறது. பெண்ணிய செயற்பாட்டாளரை நாம் இனி சமூகச் செயற்பாட்டாளராக அடையாளம் காணப் பழக வேண்டும். சமூகத்தின் சரிபாதியாக இருக்கும் பெண்ணுக்கு விடுதலை கொடுக்காமல் சமூகவிடுதலை ஏற்படாது.

### அரசியல் ஈடுபாடு

குடும்ப அரசியல் பிரதிநிதித்துவம் காரணமாக அரசியலில் ஆளுமைகளாக உருவாக்கப்பட்டவர்கள் பெண்கள். அரசியல் தலைவரின் மகளாக, மனைவியாக, துணைவியாக, விதவையாக, காதலியாக, சிநேகிதியாக இப்படி ஏதாவது ஓர் ஆண் துணையுடன் நுழைந்தவர்கள் மட்டுமே அரசியலில் பெண் ஆளுமைகளாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். 'உலக அரசியலில் அனைத்து நாடுகளின் பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களைக் கணக்கில் கொண்டால் உலகத்தில் மொத்தமே 13மூ பெண் உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள்'14 என்கிறார் புதியமாதவி.

புதியமாதவி, திராவிட அரசியல் என்றால் என்ன? அதன் சரிவுகளுக்கு யார் காரணம் இந்தியாவின் இந்துத்துவ ஆட்சி, இந்தியாவின் மதச்சார்பின்மை, சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்துகள் என்று தொடர்ந்து எழுதி வருகிறார்.

### அமுதா ஐ.ஏ.எஸ்

அமுதா ஐ.ஏ.எஸ் அவர்கள் தன் இளம்வயதிலேயே பாட்டியின் போதனையால் கலெக்டர் என்பவரால்தான் நல்லனவற்றைச் செய்ய முடியும் என்பதனை மனதில் பதிந்து கொண்டவர். இமயமலையில் மலையேற்றப் பயிற்சி முடிந்தவுடன் பத்திரிகையாளர் 'எதிர்காலத்தில் என்னவாகப் போகிறீர்கள்?' என்ற கேள்விக்குச் சிறிதும் தாமதிக்காமல் 'கலெக்டர் ஆகப் போகிறேன்;'15 எனக் கூறியதற்கேற்ப மாவட்ட ஆட்சியராகிப்; பல அதிரடியான காரியங்களைச் சாதித்தவர்.

கல்லூரிப் படிப்பினை முடித்து வெளியேறுகையில், அப்படிப்பில் 15 பிரிவுகளிலும் தங்கப் பதக்கங்களோடு வெளியே வந்தார். பிடித்ததைச் செய்யவேண்டும். அதை மனமுவந்து முழு ஈடுபாட்டோடு செய்யவேண்டும். அது வெற்றியைத் தரும். விளையாட்டில் ஆர்வமாக இருக்கும் பிள்ளை படிக்காது என்பதை எல்லாம் கல்லூரி காலத்தில் பொய்யாக்கிக் காட்டியவர் அமுதா ஐ.ஏ.எஸ்.

### மணல் கொள்ளை தடுத்தல்

'செங்கல்பட்டில் இருக்கும் பாலாற்றில் இரவு நேரங்களில் மணல் மாபியாக்கள் மணல் அள்ளிச் செல்வதைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிறுத்தியபோது லாரி ஏற்றிக் கொலை செய்ய முயற்சித்தனர். அதையெல்லாம் மீறி ஒவ்வொரு இடத்திலும்; செக் பாயிண்ட் வைத்து மணல் மாபியாக்களுக்கு முடிவு கட்டியதும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஏரிகுளங்கள், புறம்போக்கு நிலங்கள் எல்லாம் அரசாங்கத்திடமே மீட்டுக் கொடுத்ததும்'16 அமுதாவின் வீரமும் விவேகமும் நிறைந்த பணியாக அமைந்தது.

### தேர்தல் பணி

கூடுதல் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றியபோது நடிகர்கள் சூரியா, கார்த்தி ஆகியோரை வைத்து, 'வாக்கு என்பது உங்களின் உரிமை, அதை விற்பது பெருங்குற்றம், பணம் கொடுப்பதும் குற்றம், வாங்குவதும் குற்றம்' எனக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தியதும், 'தமிழகம் முழுக்கச் சோதனைச் சாவடிகள் அமைத்து 120 கோடி ரூபாயைப் பறிமுதல் செய்ததும்'17 அமுதாவின் சிறந்த கண்டிப்பும் அதிகாரமும் மிக்கப் பணியாகும்.

### வெள்ளப் பெருக்கு – நில ஆக்கிரமிப்பு மீட்டல்

சென்னையில் 2015இல் பெருவெள்ளம் ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்களை அரசு குடியிருப்புகளில் வீடு ஒதுக்கிக் கொடுத்ததும், தொழிலுக்காகவும், சொத்துக்காகவும் ஆக்கரமிப்பிற்குள்ளான இடங்களை மீட்டுக் கொடுத்ததும் அமுதாவிற்கு மன நிறைவைத் தந்த பணிகளாகும்.

### இறுதிச் சடங்கு நிகழ்வுப் பணி

*முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், ஜெயலலிதா, மு.கருணாநிதி ஆகியோரின் இறுதிச் சடங்கு நிகழ்வுகளை, அரசு சார்பில் பொறுப்பாகக் கவனித்து முடித்து பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற பெருமைக்கும் உரியவர் அமுதா.*

*விளையாட்டோ, படிப்போ, எதுவாக இருந்தாலும் சரி, முழு ஈடுபாட்டோடு செய்தால் வெற்றியை வசப்படுத்தலாம். அதிகாரத் தோரணையை ஒழித்து, மக்களோடு மக்களாக நின்று பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மட்டுமே இப்பணிக்கு ஏற்றவர்களாக இருப்பார்கள் என்று அமுதா ஐஏஎஸ் கருத்துரை வழங்கியுள்ளார்.*

### முடிவுரை

*இக்கட்டுரையில், நேர்மையுடன் பல்வேறு வழக்குகளைச் சந்தித்து சமத்துவமான தீர்ப்புகளைப் பெண்களுக்கு வழங்கிய நீதிபதி பிரபா ஸ்ரீதேவன், குழந்தைகள் நலனுக்காக, 'குழந்தை உரிமைகள் இந்தியா' என்னும் தேசிய இயக்கத்தைத் தோற்றுவித்துக் குழந்தைகள் உரிமைகளுக்காகச் சட்டங்கள் துணைகொண்டு போராடிய ஆ.தே.ரேவதி, ஆணாதிக்கப் போக்கினைக் கண்டித்தும் சினிமாவில் சித்தரிக்கப்படும் காட்சிகளை வன்மையாச் சுட்டிக் காட்டியும் பெண்களின் அரசியல் ஈடுபாட்டின் சிறப்பையும் எடுத்துரைத்த புதிய மாதவி, மாவட்ட ஆட்சியாளராகப் பொறுப்பேற்று மாவட்டத்தில் நடைபெற்ற மணல் கொள்ளை, தேர்தல் குளறுபடிகள், நில ஆக்கிரமிப்பு போன்ற பணிகளில் நேர்மையுடனும் திறமையாகவும் செயலாற்றிய அமுதா ஐஏஎஸ் ஆகியோரின் சமுதாயப் பங்களிப்பு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.*

### அடிக்குறிப்புகள்

1. சித்து மா.சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.13.
2. தொல். பொருள். நூற்பா எண்: 99.
3. மேலது, நூற்பா எண்: 152.
4. அரங்க.மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.84.
5. வி.கிரேஸ் பிரதிபா, பெருமைக்குரிய பெண்கள், ப.5.
6. மேலது, பின் அட்டைக் குறிப்பு.
7. மேலது, பக்.41–42.
8. மேலது, ப.42.
9. மேலது, ப.51.
10. மேலது, ப.55.
11. மேலது, ப.58.
12. ஊடறு றஞ்சி (சுவிஸ்) ரூ புதிய மாதவி (ப.ஆர்), சங்கமி பெண்ணிய உரையாடல்கள், ப.89.
13. மேலது, ப.92.
14. மேலது, ப.97.
15. மோ.கணேசன், இப்படித்தான் ஜெயித்தார்கள், பக்.69–70.
16. மேலது, பக்.73–74.
17. மேலது, பக்.74–75.

### துணைநூற் பட்டியல்


1. ஊடறு றஞ்சி (சுவிஸ்) புதிய மாதவி, (தொ.ஆர்), சங்கமி பெண்ணிய உரையாடல்கள், வெளியீடு: காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை–24, 2019.
2. கணேசன், மோ., இப்படித்தான் ஜெயித்தார்கள், வெளியீடு:இளையோர் இலக்கியம், பாரதி புத்தகாலயத்தின் ஓர் அங்கம், 7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18, டிசம்பர் 2021.
3. கிரேஸ் பிரதிபா,வி., பெருமைக்குரிய பெண்கள், அட்லாண்டா, அமெரிக்கா, அச்சும் வெளியீடும்: ஒரு துளிக் கவிதை, புதுச்சேரி, சூலை 2021.
4. சாலமன் சித்து, மா., பெண்ணியம் போட்ட பதியங்கள், கிரியேட், மதுரை, 1997.
5. தொல்காப்பியர், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை.
6. மல்லிகா, அரங்க., தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41–பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–98, 2002.